★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 21உ புதன் (5—9—56) ★ ★ வெளியூர்: ஆவணி 22உ வியாழன் (6—9—56) [இதழ் 74

ஆசிரியராக விரும்பும் கவர்னர்!

★

பெல்காம், செப். 3—

"எனக்குச் சந்தர்ப்பம் தரப்பட்டால், நான் ஒரு கவர்னராக இருப்பதைவிட ஆசிரியராகப் பணியாற்றுவதையே விரும்புவேன்"

என்று, பம்பாய் கவர்னர் அரிகிருஷ்ண மெகதாப், கல்லூரி மாணவர்கள் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

மாணவர்கள் அரசியலில் தீவிர பங்குகொள்ள வேண்டாமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

டில்லியின் ஓரவஞ்சனை நீடித்தால்!

'இந்திய யூனியனிலிருந்து தென்னாடு பிரிந்துவிடும்'

காங்கிரஸ் எம். பி. ஸ்ரீகண்டன் நாயர் எச்சரிக்கை

'பக்ரா-நங்கலின் புகழ் பாடினால், எங்களுக்கென்ன செய்தீர் என்று மக்கள் கேட்கின்றனர்'

'திட்டங்கள் எல்லாம் வடநாட்டவருக்குத்தானே?'

'குமுறும் மக்களுக்கு என்ன பதில் சொல்வோம்?'

டெல்லி தேவர்களிடம் கேரள காங்கிரசார் கேள்வி

"தொழில்துறை அபிவிருத்தியில் தென்னாட்டிற்கு—குறிப்பாகக் கேரளத்திற்கு டில்லி ஓரவஞ்சனை புரிகிறது; பாகுபாடு காட்டுகிறது.

"இந்த ஓரவஞ்சனை நீடிக்குமானால்—நான் இந்த மக்கள் சபையை எச்சரிக்க ஆசைப்படுகிறேன்—இந்திய யூனியனிலிருந்து (தென்னாடு) பிரிந்துபோக வேண்டும் என்ற எண்ணம் உச்சம் பெறும். ஏற்கனவே (தென்னாடு) தனிநாடாக வேண்டும் என்ற இயக்கம் இருந்து வருகிறது,"

என்று, ஸ்ரீகண்டன்(நாயர்) என்ற காங்கிரஸ் எம்.பி., டில்லி மக்கள் சபையில் குறிப்பிட்டதாகத் தெரியவருகிறது.

திரு-கொச்சி காங்கிரஸ் எம். பி.க்கள், காங்கிரஸ் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், திரு-கொச்சியில் ஆலோசகர் ஆட்சி நீடிப்பது பற்றி மக்கள் சபையில் நடைபெற்ற விவாதம் குறித்துப் பேசினர்; அப்போதுதான் இந்தத் தகவல் தரப்பட்டிருக்கிறது

தொழில் துறை அபிவிருத்தியில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டினை பல காங்கிரஸ் உறுப்பினர்களே மக்கள் சபையில் எழுப்பியிருக்கின்றனர்

ஏ. எம். தாமஸ் என்ற உறுப்பினர் மக்கள் சபையில் கூறியதாகக் கூறப்படுவதாவது:—

"எங்கள் மக்கள் மிகவும் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். டில்லி சர்க்காரை அணுகி எங்களது தொழில் பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறி, ஒரு நீர் - மின்சார உற்பத்தித் திட்டம் வேண்டும் என்றோ, அல்லது அதுபோன்றே ஒரு பெரும் தொழிற்சாலை வேண்டும் என்றோ கேட்டால், எங்கள் கோரிக்கையை ஏற்க டில்லி மறுத்துவிடுகிறது.

"எங்கள் மாநிலத்திற்குச் சென்று பக்ரா - நங்கலின் சிறப்பு குறித்தும், தாமோதர் திட்டத்தின் சீலம் குறித்தும் நாங்கள் பாடினால்—பம்பாயில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை குறித்தும், விந்தியத்திற்கு வடக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று புதிய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் குறித்தும் எடுத்துரைத்தால், எங்கள் மக்கள் உடனே 'எங்களுக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்? கேரளத்தைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்? தென்னாட்டில் என்ன தொழிற்சாலை துவங்கினீர்கள்?' என்று கேட்கிறார்கள்; நாங்கள் என்ன பதில் கூற முடியும்?"

என்று டில்லி தேவர்களைக் கேட்டிருக்கிறார், தாமஸ்!

இவரைப்போலவே பல காங்கிரசாரும் கேட்டிருக்கின்றனர்.

"நமது சர்க்கார் திட்டங்கள் எல்லாம் என்ன ஆயின தெரியுமா? இந்த திட்டங்கள் எல்லாம் தென்னாட்டு மக்களுக்காக அல்ல; அவை எல்லாம் விந்தியத்திற்கு வடக்கே உள்ள மக்களுக்காகத்தான்"

என்று மக்கள் கூறுகிறார்கள் என்றும் ஜியார்ஜ் தாமஸ் எடுத்துரைத்திருக்கிறார். டில்லி பெரிய மனிதர்களுக்கு!

விடுதலை கோரிய குற்றத்திற்காக 3,000 உயிர்களைக் குடித்தனராம்!

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் அடக்குமுறை வெறி!

ஆல்ஜியர்ஸ், செப். 3—

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் தந்துள்ள கணக்குப்படி கடந்த 1954 நவம்பர் முதல் 1956 ஆகஸ்டு 1-ந்தேதிவரையில் சுமார் 3000 அல்ஜீரிய மக்கள், படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இது ஏகாதிபத்திய வெறியர்கள் தரும் கணக்கு!

ரூ. 82½ இலட்சம் செலவில்!

மக்கள் சபை உறுப்பினர்களுக்கு விடுகள் கட்டப்பட்டனவாம்!

புதுடில்லி, செப். 4—

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தங்கும் வசதிகளுக்கென புது டில்லியில் ரூ. 82,48,500 செலவில் 404 வீடுகள் கட்டப்பட்டன. அவர்களுக்கு, இரண்டு சிற்றுண்டிச் சாலைகள் கட்ட ரூ. 1,78,000 செலவழிக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெனக் கட்டப்பட்ட வீடுகளுடன் வேலைக்காரர்களுக்காகவும் 299-விடுதிகள் கட்டப்பட்டன.

மேற்குறிப்பிட்ட இத்தகவல்களை மாநிலங்கள் சபையில் அமைச்சர் சுவரண்சிங் என்பார் தெரிவித்திருக்கிறார்.

மலபார் பிரிந்து செல்வதால்!

சென்னைக்கு ஒரு கோடி ரூபாய் மிச்சப்படுமாம்

சென்னை, செப். 4—

மாநிலப் புனரமைப்பிற்குப் பின்னர் அமைய இருக்கின்ற புதிய சென்னை மாநிலத்திற்கு, வருடவாரியில் ஒரு கோடி ரூபாய் மிச்சமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இப்போதைய சென்னை மாநிலத்திலிருந்து, பற்றாக்குறை மிகுந்த பகுதியான மலபார் மாவட்டம் பிரிந்து திரு—கொச்சி மாநிலத்துடன் சேர்க்கப்பட்டு விடுவதால், அந்தப் பகுதிகளுக்கு ஆண்டுதோறும் செலவாகும் இத்தொகை மிச்சமாகலாமாம்

மிச்சமாகிற இந்த ஒரு கோடி ரூபாயைக் கொண்டு சென்னை மாநில பதிவு பெறாத ஊழியர்களுக்கு நிவாரணம் தருவது வசதியாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

பதிவு பெறாத சர்க்கார் ஊழியர்களுக்கு (என். ஜி. ஓ) கிராக்கிப்படி விகிதத்தை உயர்த்துவது குறித்துப் பரிசீலனை செய்து சர்க்காருக்குச் சிபாரிசுகள் செய்ய நியமிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய குழு, சென்னை சர்க்காருக்கு மிச்சமாக இருக்கிற இந்த ஒரு கோடி ரூபாயை மனதில் கொண்டே, அதற்கேற்பப் பிரச்சினையைப் பரிசீலனை செய்யும் என்றும் தெரிய வருகிறது.

'காரியங்கள் நடைபெற டில்லியையே எதிர்நோக்க வேண்டியுள்ளது'

'மாநிலங்களுக்கு அதிகாரங்களில்லை'

'அவைகள் வெறும் நகர சபைகள் போலுள்ளன'

தோழர் தென்னேட்டி விசுவநாதம் கருத்து

சென்னை, செப். 4—

"எல்லாப் பிரதேசங்களில் வழங்கும் மொழிகளையும், ஆட்சி மொழிகளாக தொடர்புடைய மாநில சர்க்கார் பிரகடனப் படுத்திவிட வேண்டும்; இது தான் மொழிவழி மாநில அமைப்பால் எழக்கூடிய பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரமாகும்"

என்று, தென்னேட்டி விசுவநாதம் அவர்கள் கூறியிருக்கிறார்.

அனுகூலங்களும் பிரதிகூலங்களும் நிறைந்திருந்த போதிலும், இந்தியாவில் மாநிலங்களைப் பிரிப்பதற்கு உள்ள ஒரே அடிப்படை—மாநிலங்கள் வேண்டும் என்றால்—அதுமொழி அடிப்படைதான் என்றும் அவர் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

"என்னைப் பொறுத்தவரையில் இந்த மாநில எல்லைகளை எல்லாம் அழித்துவிட்டு, இந்தியா முழுவதையும் ஒரே 'யூனிட்டரி' ஆட்சியின் கீழ் கொண்டு வந்துவிடலாம் என்பேன்; ஏனெனில், இப்போது மாநிலங்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை; மாநில ஆட்சி என்பது புகழ்ந்து 'கூறப்படும்' நகரசபைகளைப் போலத்தான் உள்ளன. ஒவ்வொருவரும், குறிப்பாகப் பெரும்பாலும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் 'ரோட்டரி' உறுப்பினர்களும், தங்களுடைய காரியங்கள் நடைபெறுவதற்குச் சென்னையையோ, கர்னூலையோ எதிர்பார்ப்பதில்லை; மாறாக டில்லியைத்தான் எதிர்நோக்க வேண்டியுள்ளது"

என்றும் விசுவநாதம் அவர்கள், சென்னை ரோட்டரி சங்கத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

பிரிட்டிஷ் தொழிற்கட்சி உறுப்பினர் எண்ணிக்கை

மூன்றாண்டுகளாகக் குறைந்துகொண்டே வருகிறதாம்!

இலண்டன், செப். 4—

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை சென்ற ஆண்டினைவிட இந்த ஆண்டு 90,301 குறைந்துவிட்டதாம்.

இப்போது 8,43,356 தான் கட்சி உறுப்பினர் எண்ணிக்கையாம்!

1952-ம் ஆண்டில் வேறெப்போதும் இல்லாத அளவு உறுப்பினர் எண்ணிக்கை 10,14,524 ஆக உயர்ந்ததாம். அந்த ஆண்டு முதல் தொடர்ச்சியாக உறுப்பினர் எண்ணிக்கை கடந்த மூன்றாண்டுகளாகக் குறைந்து கொண்டே வருகிறதாம்.

இந்தத் தகவலை, கட்சியின் நிர்வாகக் குழு அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்தி பற்றிய சென்னை சர்க்கார் முடிவு

டில்லிக்குத் திருப்திதானாம்!

'சென்னை மாநிலத்தில் இந்தியைக் கட்டாய பாடமாக்கினாலும் சரி, அல்லது இப்போதிருக்கிறபடியே விட்டு விட்டாலும் சரி' என்று டில்லி கூறுகிறதாம்!

இப்படி நடந்துகொள்ள டில்லிப் பெரிய மனிதர்கள் அனுமதித்திருப்பதாக மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்!

இந்தி எட்டாம் வகுப்பிலிருந்து சொல்லித் தரப்படும் என்றும், அதில் ஒரு பரீட்சையும் இருக்கும் என்றும் சென்னை செய்துள்ள தாற்காலிக முடிவு டில்லிக்குத் திருப்தியைத் தந்திருப்பதாகவும் மந்திரி கூறியிருக்கிறார்,

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—9—'56 புதன்

கற்க வேண்டிய பாடம்!

★

'பாரதமாதா'வின் 'தவப்புதல்வர்'கள், பட்டம் சூட்டிக் கொண்டு பாராண்டு வரும் கடந்த ஒன்பதாண்டுகளாகப் பாரதமாதா' தவம் செய்யாமல் பெற்றெடுத்த கோடானுகோடி மக்கள்—அல்ல அல்ல—மன்னர்கள் அனுபவித்துவரும் இன்னல்கள் — இடுக்கண்கள் —தொல்லைகள்—துயரங்கள் கணக்கிலடங்காதவையாகும்.

'பாரதமாதா' அடிமையாக்கப்பட்டிருந்ததின் விளைவாகவே பாரத புத்திரர்களுக்கு வாழ்வு கிடைக்கவில்லை என்ற கூற்று பொய்யானது என்பதை நிரூபிக்கும் வகையில் தான், தவப்புதல்வர்களின் ஒன்பதாண்டுக் கால 'சுதந்திர ஆட்சி' இருந்து வருகிறது.

மக்களில், பெரும்பகுதியினரைப் பட்டினி போட்டும்பசியால் தவிக்கவிட்டும், வேலை தராது வாட்டியும் பற்றுக் குறைக்கு இலக்காக்கியும், அணுஅணுவாகச் சித்திரவதை செய்து, சாவதானமாகச் சாகடித்துக் கொண்டிருப்பது ஒரு புறமிருக்க, கொடிய அடக்கு முறைகளை அகிம்சையின் பெயரால் கட்டவிழ்த்துவிட்டு நூற்றுக்கணக்கானோரைப் பலி கொண்டு வருவது மற்றொரு புறமிருக்க, திறமைக் குறைவான நிர்வாகத்தால் வேறு நூற்றுக்கணக்கில் மக்களின் உயிர்களைக் குடித்தவண்ணமுள்ளனர், இந்தப் பாரதத் தவப் புதல்வர்கள்!

கடந்த கிழமை இறுதியில் ஐதராபாத் அருகே நிகழ்ந்த பயங்கரமான இரயில் விபத்தில் சுமார் 120 பேர்வரை உயிரிழந்திருக்கின்றனர். கடந்த 1954-ம் ஆண்டிலும் இதே ஐதராபாத்தில் நிகழ்ந்த இரயில் விபத்து சுமார் 145 பேர்களின் உயிரைக் குடித்தது.

இப்போது நிகழ்ந்த இந்தக் கோர விபத்திற்கான காரணங்கள் அனைத்தும் இன்னும் சில நாளில், நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசாரணைகள் மூலம் தெரியவரலாம்.

ஆனால் விபத்து நிகழ்ந்ததற்கு; பாலம் ஒன்று படுமோசமான நிலையில் இருந்ததே முக்கியக் காரணம் என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

மேலும், விபத்து நடைபெறுவதற்கு 21 மணி நேரத்திற்கு முன்பே தரப்பட்ட எச்சரிக்கை ஒன்று பொருட்படுத்தப்படவில்லை என்றும், கடந்த ஆகஸ்டு முதல் தேதியன்று, இப்போது இரயிலை விழ்த்திய பாலத்தில் பழுது ஏற்பட்டதாயும், அப்போதே இது சரிவரப் பழுது பார்க்கப்பட்டிருந்தால் விபத்து நேர்ந்திருக்காது என்றும் இரண்டு மூன்று மக்கள்சபை உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள தகவல் நம்மைத் திடுக்கிடவைக்கின்றன.

விபத்தில் பலியானோரின் குடும்பத்தாருக்கும், படுகாயப் பட்டோருக்கும் நாம் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிற நேரத்திலேயே, இரயில்வே இலாகா அதிகாரிகளின் அலட்சியப் போக்கு குறித்து கண்டனம் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை.

எச்சரிக்கை தரப்பட்டதை —தரப்பட்டது உண்மையானால்—பொருட்படுத்தாமல் நடந்துகொண்டவர்கள் கடும் தண்டனைக்குரியவர்கள் என்பதில் சந்தேகமே இருக்கமுடியாது.

இரயில்வே இலாகாவினர், கடந்த காலங்களில் நடைபெற்ற கோர விபத்துக்களின் மூலம் தொடர்ந்து விபத்துக்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ளுவதற்குரிய வழிகளைக் கண்டறிய வேண்டும் என்ற உணர்வையே கூடப் பெருதவர்களாயிருந்திருக்கின்றனர். கடந்த 1954-ல் 140 பேர்களை விழுங்கிய இரயில் விபத்திற்குக் காரணம், பாலம் பலவீனமாக இருந்ததுதான் — பழுதுபட்டிருந்ததுதான் என்பதை அறிந்த பின்னும், இரயில் பாதைகளில் நெடுக உள்ள பாலங்கள் அனைத்தும் சோதிக்கப்பட்டுப் பழுதுபார்க்கப்பட்டிருக்க வேண்டும். பொதுவாகவே, 'நிரந்தர இரயில் பாதைக் கண்காணிப்பாளர்கள்' என்ற அதிகாரிகள் பாதைகளைச் சரி பார்க்கும் வேலையைக் கவனித்து வருகின்றனர் என்று இரயில்வே நிர்வாகம் கூறுகிறது. இந்தக் கண்காணிப்பாளர்கள் தங்கள் வேலையைச் சரிவரச் செய்கிறார்கள் என்று கூறுவதற்கு இயலாத வகையில் விபத்துக்கள் அடிக்கடி நிகழ்ந்து விடுகின்றன.

விபத்துக்களினல் உற்றார் உறவினர், பெற்றோர் பிள்ளைகளைப் பறிகொடுத்தோருக்கு சர்க்கார் கூறுகிற சில ஆறுதல் வார்த்தைகளோ, தருகிற சில வெள்ளிக் காசுகளோ தகுந்த நஷ்டஈடு ஆக முடியாது. மேலும், 'இரயில் பிரயாணம் பாதுகாப்புடையதுதான்' என்ற மக்களது நம்பிக்கை, இதுபோன்ற திறமைக்குறைவினல்—அலட்சியப் போக்கினல்—நிகழக்கூடிய விபத்துக்களினல் தளர்ந்து வருகிறது.

எனவே, விபத்துக்களிலிருந்து சர்க்கார் பெறக்கூடிய பாடம் எல்லாம், தொடர்ந்து இனிமேல் இதுபோன்ற விபத்துக்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதாகத்தான் இருக்க வேண்டும்.

தவப்புதல்வர்கள், இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளுகிருர்களோ, என்னவோ!

ரூ. கோடி செலவில் ஹிராகுட் அணை

முதல் கட்டம் பூர்த்தியாகி பலன்தரத் துவக்கம்

புதுடில்லி, செப். 2—

ஹிராகுட் அணையின் முதல் கட்டவேலை அடுத்த வாரத்தில் முடிந்துவிடுகிறது என்றும், அன்று முதல் பல நோக்கு நதிப்பள்ளத் தாக்குத் திட்டங்களில் ஒன்று பயன்தரத் துவங்குகிறது என்றும் கூறப்படுகிறது.

அடுத்த வெள்ளிமுதல் இந்த அணையிலிருந்து 1-இலட்சம் ஏகர் நிலம் நீர்ப்பாசன வசதிபெறும் என்றும், ஹிராகுட் ரிசர்வாயரிலிருந்து அன்று பர்கா வாய்க்காலில் தண்ணீர் விடப்படும் என்றும் கூறப்படுகிறது.

1958-59-ம் ஆண்டில் இந்த அணையிலிருந்து 4,50,000 ஏகருக்குப் பாசனவசதி கிடைக்குமாம்

முதலில் 24,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்திசெய்யும் நிலையம் துவங்கும் என்றும், சீக்கிரமே அதுபோன்ற மேலும் 3 நிலையங்கள் துவக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

முதல்கட்ட வேலைக்கு மட்டும் இதுவரை ரூ. 70 கோடி செலவிடப்பட்டிருக்கிறதாம்.

திட்ட முடிவில் இந்த அணை 18 இலட்சம் ஏகருக்குப் பாசன வசதியும், 1,23,000 கிலோவாட் மின்சாரமும் தருமாம்.

இளம் குற்றவாளிகளைத் திருத்த ஜல்பபூர் போலீசாரின் நவீன முறை

ஜபல்பூர், செப். 2—

இளம் குற்றவாளிகளைத் திருத்துவதில், ஜபல்பூர் போலீசார் நவீனமான முறையொன்றை மேற்கொண்டிருக்கின்றனராம். பூட்பாலிஷ், பிரஷ், ஷாம்பூ முதலியனவற்றை ஏழு குழந்தைகளுக்குத் தந்து, அவர்களே தங்களின் வாழ்க்கைக்குத் தேவையானதைச் சம்பாதித்துக் கொள்ளுமாறு செய்திருக்கின்றனராம்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் இந்த இளம் குற்றவாளிகளை அழைத்து நகர போலீஸ் அதிகாரி நல்லுரை பகர்வதுடன் அவர்களது முன்னேற்றம் குறித்துக் கணக்கெடுத்தும் வருகின்றாராம்!

தொகுதி நிர்ணய குழுத் தலைவர்

என். சந்திரசேகரஅய்யர் நியமனம்

புதுடில்லி, செப். 3—

ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி என். சந்திரசேகர அய்யர் தலைமையில் ஒரு தொகுதி நிர்ணயக்குழுவை இந்திய சர்க்கார் நியமித்திருக்கின்றனர். பி. கே சென், பிரதம தேர்தல் அதிகாரி சென் ஆகியோர் இந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களாவர்.

மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு மாநில சட்டசபையிலும் எவ்வளவு இடங்கள் இருக்க வேண்டுமென்பதை நிர்ணயிப்பது, புதிய மாநிலங்களின் தொகுதிகளை நிர்ணயிப்பது, ஒவ்வொரு தொகுதிக்குமுள்ள இடங்களை நிர்ணயிப்பது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடங்கள் ஒதுக்குவதென்றால் எவ்வளவு இடங்கள் ஒதுக்குவது என்பது எல்லா பார்லிமெண்டரி, சட்டசபைத் தொகுதிகளையும் தக்க முறையில் நிர்ணயிக்கும்பொருட்டு பழைய தொகுதி நிர்ணயக் குழு பிறப்பித்த உத்தரவுகளை மாற்றுவது அல்லது ரத்து செய்வது ஆகியவற்றைச் செய்ய இந்தக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

நெய்வேலி நிலையம்

நவீனமுறையில் அபிவிருத்தி செய்யத் திட்டமாம்!

சென்னை, செப். 3—

கடலூர்—விருத்தாசலம் பிரிவில், சிறிய இரயில் நிலையமாக உள்ள நெய்வேலியை நவீன முறையில் பெரியதோர் இரயில் நிலையமாக்குவதற்கு இரயில்வே அதிகாரிகள் திட்டம் தயாரித்துள்ளனராம்.

பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வேலை செய்யத் தொடங்கியவுடன் ஏராளமான நிலக்கரியை வெளியிடங்களுக்கு அனுப்புவதற்காக நெய்வேலி நிலையத்தில் வசதிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

தடையை மீறியதாக 58-பேர் மீது வழக்கு

உத்தமபாளையம், ஆக. 31—

தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ்த் தாலுகாக்கள் தமிழ்நாட்டுடன் சேரவேண்டுமென்பதற்காக சர்வ கட்சிக் கூட்டணியின் முடிவிற்கிணங்க சென்ற பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தாலில் கலந்து கொண்ட தேவாரம், பண்ணைப்புரம், கோம்பை ஆகிய ஊர்களிலிருந்து 58 பேர்மீது 144 தடை உத்தரவை மீறியதாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று உத்தமபாளையம் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வாய்தா ஏற்பட்டு, வழக்கு செப். 14-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது இந்த 58 பேர்களின் சார்பில் மதுரை வழக்கறிஞர் கே. பாஹுலேயன், பெரியகுளம் வழக்கறிஞர் சீனிவாசன், மீரான் ஆகியோர் ஆஜரானர்கள். (ந. - கி.)

சர்க்கார் ஊழியர்கள் கிராக்கிப் படி

மாநில புது அமைப்பிற்குப் பின்னர் உயருமாம்

கோவை, செப். 2—

மாநில புது அமைப்புக்குப் பிறகு சர்க்கார் ஊழியர்களின் பஞ்சப் படியைச் சிறிது அதிகரிக்கக்கூடும் என்று கோவை மாவட்ட சர்க்கார் ஊழியர் சங்கத் துணைத் தலைவர் கூறியிருக்கிருர்.

லூர்துசாமி என்ற அந்தத் துணைத் தலைவர் அண்மையில் நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்தார் என்றும் கூறப்படுகிறது.

சென்னையில் எஞ்சினீயர் பஞ்சம்!

அதிகாரிகள் ஆலோசனை: சர்க்காருக்குச் சிபாரிசு

சென்னை மாநிலத்தில் படித்துத் தேறி பயிற்சி பெற்றுள்ள பல எஞ்சினீயர்கள் சென்னை சர்க்கார் வேலையைவிட்டு இந்திய சர்க்கார் வேலைக்கும்; மற்ற மாநில சர்க்கார்களின் வேலைக்கும் சென்றுவிடுவது, சென்னை சர்க்காருக்கு கவலையைத் தந்துள்ளதாகத் தெரிகிறது. இவ்விதம் ஏற்பட்டுவரும் நிலைமையையும், மேலும் இவ்விதம் நேரிடாமலும் என்ன செய்யலாம் என்பது பற்றியும் அதிகாரிகள் கலந்தாலோசித்தனர்; விவாதத்திற்குப் பிறகு, தற்போது வேலையிலிருக்கும் எஞ்சினீயர்களுக்கு அதிகச் சம்பளம் தருவது உட்பட சில சிபாரிசுகளை சர்க்காருக்குக் கூறுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தச் சிபாரிசுகளை சர்க்கார் பரிசீலனை செய்து, விரைவிலேயே நடவடிக்கை எடுக்கக்கூடும்.

வேலை இருக்கிறது— ஆள் இல்லையாம்!

புதுடில்லி, செப். 3—

இந்தியாவிலுள்ள வேலை தேடித் தரும் நிலயங்கள் கடந்த ஜூலையில் டிராப்ட்ஸ்மென், ஓவர்சீயர்கள், கம்பவுண்டர்கள், நர்சுகள், மருத்துவச்சிகள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், ஸ்டெனோகிராபர்கள், டைப்பிஸ்டுகள் ஆகியோருக்குப் பெரும் பற்றாக்குறை இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளன.

மற்றும் சுகாதார விசிட்டர்கள், யோக்கியதாம்சம் பெற்ற டாக்டர்கள், யோக்கியதாம்சம் பெற்ற எஞ்சினீயர்கள், சர்வேயர்கள், அக்கவுண்டெண்டுகள், எலக்ட்ரீஷியன்கள், டர்னர்கள், வெல்டர்கள், டிரசர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள், தேகப்பயிற்சி போதனசிரியர்கள் ஆகியோர் கிடைக்காமலும் பற்றாக்குறையிருந்ததாக பல வேலை தேடித்தரும் நிலயங்கள் அறிவித்துள்ளன.

அகாரணமாக இரயில் நிறுத்தப்படும் தொல்லை

43,295 சம்பவங்கள் நடைபெற்றனவாம்

புதுடில்லி, செப். 3—

முந்திய ஆண்டைவிட 1955-ம் ஆண்டில், அகாரணமாக இரயில் வண்டிகளில் அபாயச் சங்கிலியைப் பிடித்திழுக்கும் சம்பவங்கள் அதிகரித்திருக்கின்றன என்று கூறப்படுகிறது.

1955-ம் ஆண்டில் மட்டும் 43,295 சம்பவங்கள் நடைபெற்றன என்றும், இவற்றில் 87 சதவிகிதம் அசாதாரணமானது என்றும் கூறப்படுகிறது.

இப்படி அசாதாரணமாக இரயில்களை அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்துகிறவர்களைக் கண்டுபிடிப்பதில் சர்க்கார் படு தோல்வியடைந்திருக்கின்றனராம்! 15 சதவிகிதக் குற்றவாளிகளை மட்டுமே கண்டுபிடிக்க முடிந்தது என்றும், இதற்குக் காரணம் சங்கிலியைப் பிடித்திழுத்தவர்களைக் காட்டிக்கொடுக்க சகபிரயாணிகள் மறுத்துவிடுகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

கிழக்கு, வடகிழக்கு இரயில்வேக்களில்தான் இந்தச் சம்பவங்கள் அதிகமாயுள்ளனவாம்!

பீகார் மாநிலம்தான் அதிகமான சம்பவங்களுக்கு இடமளித்திருக்கிறது.

காலமான கவர்னரின் பேருள்ளம்!

கல்கத்தா, செப். 3—

மேற்கு வங்கத்தின் கவர்னராயிருந்து காலமான டாக்டர் எச். சி. முகர்ஜி, தான் பயின்ற கல்கத்தா பல்கலைக் கழகத்திற்கே தனது சொத்துக்கள் அத்தனையையும் அன்பளிப்பாக வழங்கியிருக்கிருர்.

கல்கத்தாவில் உள்ள அவரது இல்லம், பீகார் மதுபூரில் உள்ள மற்றுமோர் வீடு முதலிய எல்லாச் சொத்துக்களையும் 'உயில்' மூலம் அவர் கல்கத்தா பல்கலைக் கழகத்திற்கு அன்பளிப்பாகத் தந்து வழிகாட்டியிருக்கிருர்.

விசைத்தறித் திணிப்பு

டில்லியுடன் தேபர் விவாதிப்பாராம்

சென்னை, செப். 3—

விசைத்தறி புகுத்துவதை ஒட்டி எழுந்துள்ள தகராறு குறித்து காங்கிரஸ் தலைவர் தேபர், டில்லி சர்க்காருடன் விவாதிப்பதாக உறுதி கூறியிருக்கிருராம்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, விசைத்தறி புகுத்துவதால் கைத்தறியாளருக்குத் தகுந்த பாதுகாப்புத் தரப்படாவிட்டால் ஏராளமானவர்கள் வேலையின்றித் தவிக்க நேரிடும் என்று எச்சரித்திருப்பதை ஒட்டி அகில இந்திய காங்கிரஸ் தலைவர் இந்த உறுதிமொழியை வழங்கியிருக்கிருராம்.

மலாயாவின் எதிர்கால அரசியல் திட்டம்

தமிழர்களுக்கு விசேடப் பாதுகாப்பு வேண்டும்

ஈப்போ, செப். 1—

மலாயா வாழ் தமிழர்களுக்கு, மலாயாவின் வருங்கால அரசியல் திட்டத்தில் விசேடப் பாதுகாப்புகள் கோரி, இங்கு நடைபெற்ற அகில மலாயா தமிழர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மலாயா குடிமக்களல்லாத பிறருக்குக் கல்வி வசதிகள் சம்பந்தமாகவும் மற்றொரு தீர்மானம் இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆரம்பப் பள்ளிகளில், முதல் இரண்டு வருடங்கள் குழந்தைகள் தாங்கள் தாய் மொழி கற்கவும், மூன்றாவது ஆண்டில் ஆங்கில மொழி கற்கவும், நான்காவது ஆண்டில் மலாயா மொழி பயிலவும் வசதி தரும் வகையில் கல்வித் துறைக் கொள்கைகள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று அத்தீர்மானம்மூலம் கோரப்பட்டுள்ளது.

தமிழ் மொழி இடைநிலைக் கல்விச்சாலை ஒன்று அமைத்துத் தருமாறும், தமிழர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கவும், அங்குள்ள எல்லாப் பள்ளிகளிலுமே தமிழ் மொழிப் போதனைதர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கோரும் கோரிக்கைகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

கொத்தலாவலையின் முறைகள்

மாற்றப்பட வேண்டுமெனக் கோரிக்கை

கொழும்பு, செப். 1—

"இலங்கைத் தீவிலுள்ள இந்திய, பாகிஸ்தான் மக்கள் குடியுரிமைச் சட்டத்தை நியாயமான முறையில் அமுல்நடத்துவதற்கு வகை செய்யும் முறையில், இலங்கை சர்க்கார், முன்பிருந்த கொத்தலாவலை சர்க்கார் கையாண்டுவந்த அநியாய முறைகளையெல்லாம் மாற்ற வேண்டும்"

என்று கேட்டுக்கொண்டு, இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றின் செயற் குழுக் கூட்டங்களில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மேலும், அநியாய முறையில் நிராகரிக்கப்பட்ட இலங்கைக் குடியுரிமை மனுக்களை மீண்டும் பரிசீலனை செய்ய இலங்கை சர்க்காரைக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஓடும் இரயிலில் திருட்டு சம்பவங்கள்

உதவி மந்திரி தரும் புள்ளி விவரங்கள்

"சாமான்களை ஏற்றிச் செல்லுகின்ற இரயில் வண்டிகளும் அவை நிற்கும் நிலையங்களும் 'எலி வளை' போன்றவைகள்; அந்த இடங்களில் நடைபெறும் திருட்டுக்களைக் கண்டுபிடிப்பது மிகக் கடினமாக இருக்கிறது. திருட்டுச் சம்பவங்களின் எண்ணிக்கை மட்டும் குறைந்திருந்தபோதிலும், திருட்டுப் போகிற பொருள்களின் விலை மதிப்பு அதிகமாகவே இருக்கிறது. தற்போது இரயில்வேக்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகமாக இருப்பதால் திருட்டுக் குற்றங்கள் குறைந்துவருகின்றன,"

என்று, மத்திய இரயில்வே துணை அமைச்சர் ஓ. வி. அளகேசன் அவர்கள், திருச்சியில், இரயில்வேக்களில் பிரயாணிகள், சாமான்கள் வண்டிகளில் நடைபெறும் திருட்டுக்களைத் தடுப்பதற்காக என்ற நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பாதுகாப்புப் பயிற்சி நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்ற உலக யுத்தத்திற்கு முன்னர் திருட்டுப்போன பொருட்களுக்கு நஷ்டஈடாக ஆண்டுதோறும் சராசரியாக ரூ. 5 இலட்சம் சர்க்கார் அளித்துவந்திருக்கிறது என்றும், யுத்த காலத்திற்குப் பின்னர் இந்தத் தொகை ஆண்டு ஒன்றுக்கு 3 இலட்சம் ரூபாய் என்ற அளவில் குறைந்திருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

இந்திய இரயில்வேக்களில் உள்ள பல பிரிவுகளில் நடைபெற்ற திருட்டுக்கள் பற்றிய ஒரு புள்ளி விவரக் குறிப்பையும் அவர் தந்திருக்கிறார்:—

"1952—53-ம் ஆண்டில் இந்தியா முழுதும் ஓடும் இரயில்களில் 53,397 திருட்டுக்களும், 1955-ம் ஆண்டில் 2,639 திருட்டுக்களும் நடைபெற்றிருக்கின்றன. இவற்றுள், தென்பகுதி இரயில்வேயில் மட்டும் முறையே 611; 171 திருட்டுச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இந்தியா முழுமையிலுமாக, இந்த ஆண்டுகளில் முறையே 3,626; 1,304 திருட்டுகள் நடைபெற்றிருக்கின்றன. தென்பகுதி இரயில்வேயில் மட்டும் முறையே 376; 99 திருட்டுக்கள் நடைபெற்றிருக்கின்றன.

"இந்த ஆண்டுகளில், சாமான்கள் ஏற்றிச்செல்லும் இரயில் வண்டிகளில், முறையே 1,748; 648 திருட்டுக்கள் நடைபெற்றதில், தென்பகுதி இரயில்வேயில் மட்டும் முறையே 377; 608 திருட்டுக் குற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன."

ஒரிசா சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலும் கோஷ்டிச் சண்டை?

புவனேசுவர், செப். 3—

சில உறுப்பினர்களின் வேண்டுகோளின் மீது கூடிய ஒரிசா சட்டசபை காங்கிரசுக் கட்சிக் கூட்டம், ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டதின் காரணமாகத் திடீரென்று கலைந்துவிட்டதாம்.

கட்சியின் எதிர்காலத் தலைமை பற்றி ஆலோசனை செய்ய கட்சியின் கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானமே ஒழுங்கு முறைக்கு ஏற்றதல்லவென்று அறிவிக்கப்பட்டது.

'வெள்ளையர் வர்க்கமே அழிந்துவிடும்'

டர்பன், செப். 3—

"தென்னாப்பிரிக்கப் பிரதமர் ஆதரிக்கும் இன ஒதுக்கல் கொள்கையின் காரணமாகத் தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் வர்க்கமும் அழிந்துவிடும் என்று தென்னாப்பிரிக்கப் பெடரல் கட்சித் தலைவர் எச்சரித்துள்ளார்.

இலாபகரமாக இயங்காவிட்டாலும்!

தொடர்ந்து நடத்த சர்க்கார் தீர்மானித்துவிட்டனராம்

பம்பாய், செப். 2—

பிரயாணிகள் கப்பல் போக்குவரத்துக்களை மேலும் புதியதாக ஏற்படுத்தவோ, விரிவு படுத்தவோ சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனராம். இத்தகு புது 'சர்வீசு'கள் இலாபகரமாக இயங்காவிட்டாலும் கூட அவற்றைத் தொடர்ந்து நடத்துவதென சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனராம்.

இந்தத் தகவலை மத்திய இரயில்வே அமைச்சர் வெளியிட்டிருக்கிறார்.

சென்னை—இரங்கூன், கல்கத்தா — சென்னை — அந்தமான், இந்தியா—பக்ஷியா குடா, இந்தியா—செங்கடல் ஆகியவற்றிற்குப் பிரயாணிகள் போக்குவரத்து முதலியவையே மேற்குறிப்பிட்ட கப்பல் போக்கு-வரத்துக்களில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் பெற்றவை என்றும் தெரிகிறது.

இந்தியா — இலட்சத்தீவு—மாலத்தீவுகளிடையே ஒழுங்கான கப்பல் போக்கு-வரத்து ஏற்படுத்துவது குறித்தும் சர்க்கார் தீவிரமாக ஆலோசனை செய்து வருகின்றனர் என்றும், மேற்குக் கப்பல் போக்குவரத்துக்கார்ப்பொரேஷன், மேலும் இரண்டு எண்ணெய்க் கப்பல்கள் வாங்கும் உத்தேசத்தில் இருந்துவருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'காங்கிரசில் கரைந்துவிட தயாராக இல்லை'

அகாலிதளத் தலைவர் அறிவிப்பு

'காங்கிரசில் கரைந்துவிடத் தயாராக இல்லை' என்று அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் தெரிவித்திருக்கிறார்.

அகாலி தளத்தைக் காங்கிரசில் சேர்த்துவிடுமாறு அகில இந்தியப் பெருந்தலைகள் மேற்கொண்ட பெருமுயற்சி தோல்வியுற்றிருக்கிறது.

'கால்சாபந்த்' ஏற்பாட்டினை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டாலன்றி, காங்கிரசில் சேருவது சாத்தியமில்லையென தாராசிங் தெரிவித்திருக்கிறார்.

"'தர்ம'த்தைக் காப்பதற்காக தங்களது குருக்களால் நிர்மாணிக்கப்பட்டது 'கால்சாபந்த்'; எனவே, அவற்றைப் பாதுகாக்கும் உரிமை சீக்கியருக்கு வேண்டும்" என்று அவர் எடுத்துரைத்திருக்கிறார்.

டில்லியில் பிரதமர் நேருவையும், இதரரையும் சந்தித்த பின்பே அவர் இந்த முடிவை வெளியிட்டிருக்கிறார்

விவசாயக் குடும்பங்கள் நிலைபற்றி மாதிரி 'சர்வே'

சென்னை, திரு-கொச்சி ஆகிய மாநிலங்களில் விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள், குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை, வருமானம், வேலை நிலைமை, கடன் நிலைமை ஆகிய விபரங்களைச் சேகரிக்க மாதிரி 'சர்வே' நடத்த மத்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்

நன்றி

"19-8-56-ல் எனது தந்தை காலஞ்சென்றதை ஒட்டி, கடிதங்கள், தந்திகள் அனுப்பியும் நேரில்வந்தும், ஆறுதல் கூறிய நண்பர்கள் அனைவருக்கும் என் சார்பாகவும், குடும்பத்தின் சார்பாகவும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தனித் தனியே நண்பர்களுக்குக் கடிதம் தீட்ட இயலாமைக்குரிய நான் மன்னிப்புக்குரியவன்"

என்று தோழர் கி. மனோகரன் அறிவித்துக்கொள்கிறார்.

ஆசிரியருக்குக் கடிதம்

ஆட்சி மன்றத்தின் அசட்டுப் போக்கு?

ஐயா,

கும்மிடிப்பூண்டியில் இருக்கிற மருத்துவ நிலையத்தின் இன்றைய நிலை குறித்து எழுதும் இந்தக் கடிதம், அதை மேல்பார்வையிடும் மாவட்ட ஆட்சி மன்றத்தின் மூடி இருக்கும் கண்களைத் திறந்துவிட்டு கும்மிடிபூண்டி மருத்துவ நிலையம் செம்மையாக இயங்கும் என்ற நல்லெண்ணத்தோடு எழுதுவதாகும்.

கும்மிடிபூண்டியில், மருத்துவ நிலையத்தில் வேலை பார்த்துவந்த ஒரு டாக்டர் மூன்று மாதத்திற்கு முன் தன் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார். அவர் சென்ற பிறகு இன்றுவரை வேறொரு மருத்துவரை மீண்டும் நியமிக்காமல் இருப்பது பொது மக்களுக்குப் பெரும் குறையாக இருந்துவருகிறது. சிறு சிறு வியாதிகளையாயினும் இங்குள்ள கம்பவுண்டர்களும், மற்றும் சிலரும் கவனித்துக்கொள்ள முடியும். ஆனால், பெரும் வியாதிகளுக்குச் சிகிச்சை செய்ய ஒரு டாக்டர் அவசியம் தேவை.

அம்மருத்துவ நிலையத்திற்கு நோயாளிகள் அடிபட்டு இரத்தைக் கறை படிந்தவர் சென்றால் அவர்களுக்குச் சிகிச்சை செய்ய 'பேண்டேஜ்' துணியும் பஞ்சம் இல்லாமல், சில நேரங்களில் மருத்துவமனைப் பணியாளர்கள் தவிக்கிறார்கள். நோயுள்ளவர்களுக்கு ஊசி போட வேண்டிய நிலை வந்தால், ஏழைகளிடத்திலிருந்து ஊசிக்கு வேண்டிய பணத்தை வசூல் செய்கிறார்கள். 'இலவசமாக மருந்து கொடுக்க வேண்டியிருக்கப் பணம் கேட்கிறீர்களே?' என்றால், 'நாங்களென்ன செய்வோம்?' 'மாவட்ட மருத்துவ அதிகாரிகள் சப்ளை செய்யவில்லை'— என்றும், நோயாளிக்குப்போடுகிற ஊசி தங்கள் சொந்த மருந்து என்றும் ஆகையால்தான் அதற்குரிய பணம் கேட்பதாகவும் சொல்லுகிறார்கள். மேலும் கேட்டால், 'மேலதிகாரிகளுக்கு எழுதுங்கள்' என்று சுருங்கச் சொல்லிவிடுகிறார்கள். எனவே, குறைகள் தெரிவிக்கும் பொது மக்களில் பலர் ஏழைகளாதலால் சென்னைக்குச் சென்றோ மற்ற மற்ற இடங்களுக்குச் சென்றோ தங்கள் நோய்களைத் தீர்த்துக்கொள்ளும் நிலையில் இல்லை. ஆகையால்; மாவட்ட ஆட்சி மன்றத்தார் பழைய கும்மிடிப்பூண்டி மருத்துவ நிலையத்திற்கு உடனடியாக ஒரு டாக்டரை நியமித்து பொது மக்களின் அதிருப்தியைப் போக்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஏ. இராதாமணாளன்
கும்மிடிப்பூண்டி.

இந்தியத் தேயிலை ஏற்றுமதியில்...!

மத்தியக் கிழக்கு வணிகக் களத்தை இந்தியா இழந்தது ஏன்?

புதுடில்லி, செப். 1—

"இந்தியாவிலிருந்து தன் நாட்டிற்கு இறக்குமதி செய்யும் தேயிலையை பிரிட்டன் மறுபடியும் ஏற்றுமதி செய்துவருவதின் விளைவாக இந்தியா, மத்தியக் கிழக்கு நாடுகளிலுள்ள தனது வணிகக் களத்தை இழந்துவிட்டது"

என்று, தோட்டத் தொழில் விசாரணைக் குழு உறுப்பினர் திரு. கே. சி. சிவசாமி கூறியிருக்கிறார்.

தம்முடைய கூற்றை நிரூபிக்கும் வகையில் சில புள்ளி விபரங்களையும் அவர் சுட்டிக்காட்டுகிறார் :—

"1952-ல் இந்தியாவிடமிருந்து பிரிட்டன் இறக்குமதி செய்து மறுபடி ஏற்றுமதி செய்தத் தேயிலையின் அளவு 94,18,000 இராத்தல்; ஆனால் 1954ல், இந்த அளவு, 1,68,62,000 இராத்தலாக உயர்ந்துவிட்டது.

"தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் பெரும்பாலும் அயல் நாட்டவரின் கைகளில் குவிந்து கிடப்பதால்தான் இது சாத்தியப்படுகிறது. இந்தியத் தேயிலை ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தவும், கல்கத்தா தேயிலை ஏலத்தை உயர்த்தவேண்டுமென்ற சர்க்கார் நோக்கம் ஈடேற வொட்டாதபடி பங்கப்படுத்தவும் இந்த அயல் நாட்டுக் கம்பெனிகளால் முடிகிறது," என்று குறிப்பிட்ட அவர், '1954—55ம் ஆண்டுகளில் கல்கத்தாவில், ஏற்றுமதிக்கான தேயிலை ஏலங்களில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மிக அதிகமானது என்றும் தெரிவித்திருக்கிறார்.

திரைப்பட நடிகை

ஆந்திர சர்க்கார் கவுரவிக்கும்

அக். 1-ந்தேதியன்று, ஆந்திர மாநில உதயமான மூன்றாவது ஆண்டுவிழாவைக் கொண்டாடும்போது, நான்கு சிறந்த கலைஞர்களை ஆந்திர சர்க்கார் கவுரவிக்குமாம்; அவர்களில், திரைப்பட நடிகை பானுமதியும் ஒருவராவார்

இரஷ்ய அணுகுண்டு பரிசோதனை

மக்கள் சபையில் நேரு கண்டனம்

வாஷிங்டன், செப். 3—

சைபீரியாவில், மூன்றாவது அணுகுண்டு பரிசோதனையை நடத்தியதாக அமெரிக்க அணு சக்திக் குழு கூறியுள்ளது. இப்பரிசோதனைகள் முறையே ஆக. 24, 30-ந் தேதிகளில் நடைபெற்றதாக ரஷ்யாவும் கூறியுள்ளது.

சைபீரியாவின் தென்மேற்கே இந்தியாவின் எல்லையருகில் நடைபெறும் ரஷ்யப் பரிசோதனை பற்றி மக்கள் சபையில் கேள்விகள் எழுந்தன; பிரதமர் நேரு பதிலளிக்கையில் சொன்னார் :—

"குண்டுகளை வெடிக்கும் இந்தச் சோதனைகளின் விளைவுகள் விபரீதமாக இருக்குமென்றே இந்திய சர்க்கார் கருதுகிறது; ஒரு நாடு சோதனை செய்தால் மற்றொரு நாடும் சோதனை செய்கிறது; சமாதானம் நிலவ வேண்டுமென்று எல்லோரும் கூறிக்கொண்டாலும், அச்சத்தின் காரணமாகவே இந்த ஆயுதப் போட்டி நடந்துகொண்டு வருகிறது."

"இதை நிறுத்தக்கூடிய நிலைமையில் சர்க்கார் இல்லை; நட்பு முறையில் அந்நாடுகளை அணுகி, இதிலுள்ள அபாயங்களை எடுத்துக் காட்டி வருகிறோம். எந்த இடத்தில் குண்டு வெடிக்கப்பட்டது என்பதைக் கண்டுபிடிப்பதற்கான சாதனம் நம்மிடம் இல்லை."

திராவிட நாடு விடுதலை (பிரிவினை) வாரம் கொண்டாடுவீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளான 17—9—56-ஆம் நாளிலிருந்து 23—9—56-ஆம் நாள்வரை

திராவிடநாடு விடுதலை (பிரிவினை) வாரமாகக்

கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும், கழகச் சார்புள்ள அமைப்புக்களையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்திக் கருத்து விளக்கம் செய்யுமாறு மகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
1—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

பொதுத் தேர்தலில் காங்கிரசை முறியடிக்க!

'இடதுசாரிகள் முன்னணி' நிச்சயம்

மேற்கு வங்கத்தில் நிலைமை

இந்தியாவில் உள்ள இடதுசாரிக் கட்சிகள் எல்லாம் தேர்தல் காலம் நெருங்க நெருங்கக் காங்கிரசை முறியடிப்பது எப்படி.? யார் யாருடன் கூட்டுச் சேரலாம்? எவரெவரது ஒத்துழைப்பைப் பெற முடியும்?—என்ற விவகாரங்களிலேயே சிந்தனையைச் செலவிட்டு வருகின்றன.

மேற்கு வங்கத்தில், சமீபகாலமாக, மாநிலப் புது அமைப்பை ஒட்டி எழுந்தப் பிரச்சினைகளின் போதெல்லாம் இடதுசாரிக்கட்சிகள் அத்தனையும் இணைந்து நின்றே நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றன.

இடதுசாரிகளிடையே அப்படி எழுந்த கூட்டு முயற்சி இப்போது உணவுப் பொருள் விலையேற்றத்தைத் தடுக்கவும் ஒரு சர்வகட்சிக் குழு அமைப்பதற்கு உதவியிருக்கிறது.

வெற்றிகரமான சாதனைகள் பலவற்றிற்கு இந்தக்கூட்டு முயற்சி வழிசெய்திருக்கிறது என்பதால், தேர்தலில் காங்கிரசை முறியடிக்கவும் மேற்குவங்க மாநிலத்தில் ஒரு இடதுசாரி முன்னணி அமைவது சாத்தியமே எனவும் பலர் நம்புகின்றனர்.

★★★★★★★★★★-★-★★★★★★

வாழ்க்கை ஒப்பந்த விழா

★

7—9—56 காலை 9-மணியளவில் திருத்துறைப்பூண்டி தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. தருமலிங்கம்—தோழியர் ஞானகலாவிலாசினி திருமணம், மணமகன் இல்லத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

★-★★★★★★★★-★★★★★★★★

ரூ. 5,000 இலஞ்சம் வாங்கிய அதிகாரி

பாட்னு இரயில் நிலையத்தில் கைது

பீகார் சர்க்காரில் வேலை செய்யும் உயர்தர அதிகாரி ஒருவர் நேற்று பாட்னு இரயில் சந்திப்பில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அவர் ஒரு பிரயாணிகள் வண்டியிலிருந்து இறங்கியபோது இலஞ்ச ஒழிப்பு இலாகாவினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து ரூ. 5,000 பெறுமான நோட்டுகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இவை, முன்னாள் இரவு இவர் இலஞ்சமாகப் பெறப்பட்டவை என்றும் இவற்றில் ஒரு விசேட நீதிபதியின் கையொப்பமிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதிகாரி கைது செய்யப்பட்டபோது இரயில் நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாம்.

கழகக் கூட்டங்கள்

★

அறந்தாங்கி :
வ. உ. சி. திடல்
7—9—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
கண்ணதாசன்
எஸ். எஸ். தென்னரசு

★

திருத்துறைப்பூண்டி :
வாணக்காரத் தெரு
7—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : இரா. சிவாஜி
பேசுபவர் : ஈ. வெ. கி. சம்பத்

★

சோழம்பட்டு (தெ. ஆ.)
7—9—56 மாலை 5 மணிக்கு
பேசுவோர்:
ஏ. எல். சி. கிருட்டிணசாமி
டி. பி. கேசவன்
ந. நாச்சியப்பன்

தகவல் தருகிறார்!

புதுடில்லி, செப். 4—

இலங்கைக் குடியேற்ற, வெளியேற்றக் கட்டுப்பாடுச் சட்டத்தின் கீழ், இலங்கையிலிருந்து 1955 - அக்டோபர் 27-ந் தேதி முதல் 1956 ஜூலை 30-ந் தேதி வரை 711 இந்தியர்கள் வெளியேற்றப் பட்டிருக்கின்றனர் என்ற தகவலை, மாநிலங்கள் சபையில் பிரதமர் நேரு அறிவித்திருக்கிறார்.

★

'அடங்காப்பிடாரி' காங்கிரசார்

பி. சோ. கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து காங்கிரசை எதிர்ப்பர்

திரு–கொச்சியில் தேர்தல் நிலை

திருவனந்தபுரம், செப். 4—

திரு-கொச்சி மாநிலத்தின் 'அடங்காப்பிடாரி' காங்கிரசார், பி. சோ. கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து காங்கிரசை அடுத்துவரும் பொதுத்தேர்தலில் எதிர்க்கப் போவதாக அந்தக் கோஷ்டியின் தலைவர் சங்குப்பிள்ளை என்பார் கூறியிருக்கிறார்.

கம்யூனிஸ்டுகள் உள்பட இதர இடதுசாரிக் கட்சிகளையும் சேர்த்த ஒரு முன்னணி அமைப்பதும் தங்களுக்குச் சம்மதமே என்று அவர் கூறியிருக்கிறார்.

காங்கிரசுடன் ஒத்துப்போகும் எண்ணத்தை தாங்கள் அறவே கைவிட்டு விட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

"அடங்காப்பிடாரிகள் எல்லாம் சேர்ந்து, ஒரு கட்சி அமைத்துக் கொள்வார்களா?" என்று கேட்டபோது, புதிய கட்சி துவக்கி, அபேட்சகர்களை நிறுத்துவதில் சிரமக் கஷ்டம் இருப்பதாகவும் அவர் பதில் கூறியிருக்கிறார்.

'இந்தியாவில் வாழும் பெண்கள் சமூக கேடுகளிடையே வாழ்கிறார்கள்'

'பின்தள்ளப்பட்டவர்களாகக் கருதப்பட வேண்டும்'

புதுடில்லி, செப். 4—

"பெண்கள் ஒரு வகுப்பினர் என்ற முறையில் பின்தங்கியவர்களே,"

என்று பின்தள்ளப்பட்ட வகுப்புக் கமிஷன் கருதுகிறதாகத் தெரிகிறது.

"இந்தியாவில் வாழும் பெண்கள், பெரும் சமூகக் கேடுகளுக்கிடையே வாழ்கிறார்கள்; எனவே, அவர்கள் பின்தள்ளப்பட்டவர்களாகவே கருதப்பட வேண்டும்.

"ஆனால், பெண்கள் ஒரு தனி சமுதாய வகுப்பாக இல்லை; எனவே, பின்தள்ளப்பட்ட வகுப்பினர் பட்டியலில் அவர்களைச் சேர்த்துக்கொள்ள முடியவில்லை.

"ஆனாலும், அவர்களின் பிரச்சினைகளை நாங்கள் கண்ணுறுமலிருக்க முடியாது,"

என்று கூறிவிட்டுக் குழுவினர், பெண்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென சில பரிகாரங்களையும் கூறியிருக்கின்றனர்.

"எல்லாக் கிராமப் பஞ்சாயத்துகள், கல்விக் குழுக்கள், சட்டசபைகள் இவற்றில் எல்லாம் பெண்களையும் ஏராளமாக இடம் பெறுமாறு செய்ய வேண்டும். அரசியல் துறையிலும் பெண்கள் பெரிய இடங்களைக் கைப்பற்றுமாறு ஊக்குவிக்க வேண்டும்.

"ஆண்டொன்றுக்கு ரூ. 3,000-த்திற்குக் குறைவாக வருமானமுடையவர்களின் பெண்களுக்கு இலவசமான கல்வி எல்லா நிலைகளிலும் அளிக்க வேண்டும்,"

என்பவை, குழுவின் சிபாரிசுகளில் சிலவாகும்.

பட்ட காலிலேயே படுகிறது!

ஐதராபாத்தில்மீண்டும் பாலம் இடிந்து விபத்து

ஐதராபாத், செப். 5—

இம்மாதம் முதல்தேதியன்று இரவுதான், ஐதராபாத்தில், பாலம் ஒன்று இடிந்ததின் விளைவாகக் கோர இரயில் விபத்தொன்று ஏற்பட்டு சுமார் 117 உயிர்களைப் பலி கொண்டது நினைவிலிருக்கலாம்.

நேற்று, மீண்டும் ஐதராபாத்திற்கு சுமார் 20 கல் தொலைவிலுள்ள குட்டகுடா என்னும் இடத்தில் சிறு நதி ஒன்றின்மீது கட்டப்பட்டிருந்த பாலம் நொறுங்கிச் சிதறியதால், அதன்மீது சென்றுகொண்டிருந்த லாரி ஒன்று குடைசாய்ந்து, நொறுங்கிவிட்டது அதில் ஏறிச் சென்ற இருவர், அந்த இடத்திலேயே உயிர் துறந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது

இந்தப் பாலம் நொறுங்குண்டதையொட்டி ஐதராபாத்—மசூலிப்பட்டணம் நேர்வண்டிப் போக்கு-வரத்துத் தடைப்பட்டிருக்கிறதாம். மேற்படி பாலத்தைப் பழுது பார்க்கவும் இரண்டு நளாகுமாம்.

நதிமீது கட்டப்படும் பாலங்கள் பலமில்லாமல் இடிந்து விழுவதாலேயே இங்கு அடிக்கடி கோர விபத்துக்கள் பலவும் நிகழ்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

பலியானோர் தொகை உயருகிறது!

ஐதராபாத், செப் 4—

சென்ற 1-ந் தேதியன்று இரவு நடைபெற்ற மெகபூப் நகர் இரயில் வண்டி விபத்தில் இறந்தவர்களின் தொகை, இன்று கண்டெடுக்கப்பட்ட 3 பிரேதங்களைச் சேர்த்து 117 ஆக உயர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நிலக்கரித் தொழிலுக்கான இயந்திர சாதனங்கள்

இந்தியாவிலேயே தயாரிக்க ரஷ்யா உதவுகிறது

புதுடில்லி, செப். 4—

நிலக்கரிச் சுரங்கத் தொழிலுக்குத் தேவையான இயந்திரச் சாதனங்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்கு இந்திய சர்க்காருக்கு உதவி செய்ய சோவியத் ரஷ்ய சர்க்கார் முன்வந்திருக்கிறதாம்.

இதற்கான வசதிகளை ஆராய விரைவிலேயே இரண்டொரு ரஷ்ய நிபுணர்கள் இந்தியா வரக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

குடியிருப்பு வசதிக்குத் திட்டம்

ரூ. 7,19,92,000 செலவு

புதுடில்லி, செப். 4—

1956—57-ம் ஆண்டில், இந்திய சர்க்கார், குறைந்த வருவாய் உடையவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளுக்கு உதவும் திட்டத்திற்கென ரூ 7,19,92,000 ஒதுக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சிறுபான்மை மொழியினருக்குப் பாதுகாப்பு

டில்லியின் உத்தேசத் திட்டம் குறித்து பண்டித பந்த்

புதுடில்லி, செப். 4—

மொழிவழி சிறுபான்மையினருக்குத் தகுந்த பாதுகாப்பளிக்கும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்படும் என்றும், அதற்காக மசோதா ஒன்று மக்கள் சபையில் கொண்டுவரப்படும் என்றும் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் கூறியிருக்கிறார்.

சிறுபான்மையினர் ஒரு குறிப்பிட்ட அளவு இருப்பார்களேயானால் அவர்கள் வாழும் பகுதியில் அவர்களது மொழி வழங்க அனுமதி கிடைப்பதுடன், பிரதேசங்களில் ஒரு அதிகாரி நியமிக்கப்படுவார் என்றும், அவரது அறிக்கைகள் மக்கள் சபையில் தாக்கல் செய்யப்படும் என்றும் பண்டித பந்த் கூறியிருக்கிறார்.

கூட்டத்தினரை கலைக்க வேறுவழியில்லையாம்; ஆகவே சுட்டார்களாம்!

டாக்கா துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் பலி; 24 பேருக்குக் காயம்

டாக்கா, செப். 4—

நிலவிவரும் உணவுப் பஞ்சத்தைத் தீர்க்கக் கோரி டாக்காவில், ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபட்ட கூட்டத்தினரைக் கலைக்கப் போலீசார் இரண்டு இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர். இதன் விளைவாக, மூன்று பேர் கொல்லப்பட்டதாகவும், 24 பேருக்குக் காயமேற்பட்டுள்ளதாகவும் அதிகாரப் பற்றற்றச் செய்தியின் மூலம் தெரியவருவதாகச் செய்தி ஒன்று கூறுகிறது

இன்று காலை முதல் டாக்கா நகரில் 144 ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது; அதை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதாகவும், வேறு முறைகளில் கிளர்ச்சியாளர்களைக் கலைத்துக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமற்போய்விட்டதால் தான் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எகிப்திற் செலாவணியைப் பெற்றுக்கொண்டு ரஷ்ய சர்க்கார், எகிப்துக்கு இரண்டு இலட்சம் டன் கோதுமை விநியோகம் செய்ய ஒப்புதல் தந்திருப்பதாக எகிப்து உணவு விநியோக அமைச்சர் அறிவித்திருக்கிறாராம்.

★

பீகார் பி. சோ. கட்சி தரும் மூன்று யோசனைகள்

பாட்னு, செப். 5—

காங்கிரசைத் தனித்தனியாகப் பிரிந்து நின்று எதிர்ப்பது முடியாத காரியம்; எனவே இடதுசாரிகள் ஒன்றுபட்டு நேரடிப் போட்டியின் மூலம்தான் காங்கிரசை முறியடிக்க முடியும் என்பதை பீகார் மாநிலத்தின் எல்லா எதிர்க்கட்சிகளும் உணர்ந்திருக்கின்றனவாம்.

தேர்தலில் கலந்துகொள்ளவிருக்கிற பிரதான எதிர்க்கட்சிகளான பி. சோ., கம்யூனிஸ்டு, ஜனதா, சோஷலிஸ்டு, ஜார்கண்டு கட்சிகளின் தலைவர்கள், இடதுசாரிகளிடையே எத்தகைய இணைப்பு ஏற்பட வேண்டுமென்பது குறித்துச் சிந்தித்து வருகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

மாநில பி. சோ. கட்சியினர், தேசிய நிர்வாகக் குழுவிற்கு, மாநிலத்தில் ஏற்படுத்தக்கூடிய இடதுசாரிக் கூட்டமைப்புகள் குறித்து மூன்று வகையான யோசனைகள் தெரிவித்திருக்கின்றனராம் :

(1) இணைதல்; (2) ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்தல்; (3) ஒருவருக்கொருவர் தலையிடாதிருத்தல்—என்ற அடிப்படையில் இடதுசாரிகள் ஒன்றுபடலாம்.

கூட்டுச் சேருதல் என்றால், சில இடங்களுக்காகக் கூட்டுச் சேரும் கட்சிகளுடன் சேர்ந்து பணியாற்றுவது என்றும், விட்டுக்கொடுத்தல் என்றால் இருசாராரும் தங்களை சில விவகாரங்களில் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் என்றும், தலையிடாதிருத்தல் என்றால் காங்கிரசை முறியடிக்கவேண்டும் என்ற பொது நோக்கத்திற்காக இதர இடதுசாரி கட்சிகள் போட்டியிடும் இடங்களில் அபேட்சகர்களை நிறுத்தாமல் ஒதுங்கி நின்று கொள்ளுதல் என்றும் பி. சோ. கட்சியினர் விளக்கம் கூறியிருக்கின்றனராம். இப்படி, தேர்தலுக்கான காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணிகள் உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை ஒவ்வொரு கட்சியும் சிந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது.

திருமணங்கள்

7—9—56 காலை $5\frac{1}{2}$ மணிக்கு, எரச்சப்பாடி மணமகள் இல்லத்தில், தாரைவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் சின்னமுத்துசாமி—தோழியர் செல்லாத்தாள் திருமணம் திரு. மேடைவலசு சிதம்பரனார் தலைமையிலும் கன்னிவாடிப் பெரியார் கே. எஸ். எஸ். முன்னிலையிலும் நடைபெறும். தோழர் கி. மனோகரன் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

7—9—56 காலை 9 மணிக்கு, வேலாயுதம்பாளையம் தோழர் க. பெரியசாமி—தோழியர் முத்துலட்சுமி திருமணம், தோழர் ப. கண்ணன் தலைமையிலும், தோழர் வை இரத்தினவேலு முன்னிலையிலும் நடைபெறும் திரு. மேகலை வாழ்த்துரை வழங்குவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.